# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

# O.S.No. 96 / 2021

# CNR.No.TNCB19000

Date:04.11.2025 DW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ராஜாமணி | **வயது** | 49 |
| **த/பெ** | சாமிக்கவுண்டர் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | தேக்கம்பட்டி | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 04th November 2025

பி.வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சா.ஆ.6 ஐ 03.05.1991 ல் பழனிச்சாமியிடமிருந்து நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். அதில் சொத்து விபரத்தில் க.ச.எண்.169 / 1 ல் 7 ஏக்கர் 68 செண்ட் விவசாய பூமியில் 4 ஏக்கர் 18 செண்ட் பூமியை செக்கு பந்தி கண்டு கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் க.ச.எண்.169 / 2 ல் 1 ஏக்கர் 21 செண்ட் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலை எண்கள், விஸ்தீரனம், செக்குபந்தி ஆகியவைகள் தான் எனக்கு கிரையம் எழுதி கொடுத்த M. பழனிச்சாமி குடும்பத்தார் செய்து கொண்ட 26.09.1988 ஆம் தேதிய பாகபத்திரத்தில் M.பழனிச்சாமிக்கு ஒதுக்கப்பட்ட பூமியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்கண்ட க.ச.எண்.169 / 1 மற்றும் 169 / 2 ல் நான் 03.05.1991 ல் கிரையம் பெற்ற பூமிகளின் மொத்த விஸ்தீரனம் 5 ஏக்கர் 39 செண்ட் என்றால் சரிதான். மொத்த விஸ்தீரனம் 8 ஏக்கர் 89 செண்ட் பூமியில் அம்மாசைக்கவுண்டருக்கு விற்ற 1 ஏக்கர் பூமியை தவிர 7 ஏக்கர் 89 செண்ட் பூமியில் 2 ஏக்கர் பூமியை S. பழனிச்சாமிக்கு விற்றதும் 50 செண்ட் சரசம்மாளுக்கு 26.09.1988 அன்று பாக கராரில் ஒதுக்கப்பட்டதுமான பூமியை தவிர மீதமுள்ள பூமிதான் 5 ஏக்கர் 39 செண்ட் ஆகும்

என்றால் சரிதான். S. பழனிச்சாமிக்கு 2 ஏக்கர் பூமியை விற்றதும், 50 செண்ட் பூமி சரசம்மாளுக்கு பாகபத்திரத்தில் ஒதுக்கப்பட்டதும் நான் கிரையம் பெறுவதற்கு முன்பாகவே ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான்.அம்மாசை கவுண்டருக்கு விற்ற பூமி, S. பழனிச்சாமிக்கு விற்றகப்பட்ட பூமி மற்றும் சரசம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட பூமி ஆகியவற்றை அவர் அவர்களுக்கே சுவாதீனம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

29.07.1991 ல் வா.சா.ஆ.7 ல் க.ச.எண்.168 / 3 காலையில் 50 செண்ட் பூமியை M. பழனிச்சாமி என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். அம்மாசைகவுண்டருக்கு 1 ஏக்கர் பூமியும், S. பழனிச்சாமிக்கு 2 ஏக்கர் பூமியும், சரசம்மாளுக்கு 50 செண்ட் பூமியும், 03.05.1991 ல் நான் M. பழனிச்சாமியிடம் கிரையம் பெற்ற பூமி 5 ஏக்கர் 39 செண்ட் ஐ யும் சேர்த்து மொத்தம் 8 ஏக்கர் 89 செண்ட் பூமி ஆகும் என்றால் சரிதான். ஒரு காலை விடுபட்டு விட்டது.

விடுபட்டு போன காலையின் பூமியின் மொத்த விஸ்தீரணம் மேலே கூறியுள்ள 8 ஏக்கர் 89 செண்ட் பூமிக்குள் வருகிறதா அல்லது அதற்கு மேலே அதிகமாக வருகிறதா என்றால் மேலே சொன்ன 8 ஏக்கர் 89 செண்டிற்குள் வருகிறது. 19.12.2001 ல் M.பழனிச்சாமியிடம் இருந்து மீண்டும் ஒரு பூமியை கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான்.அந்த மேற்படி வா.சா.ஆ.8 கிரையபத்திரத்தில் நான் கிரையம் பெற்ற பூமிகள் க.ச.எண்.169 / 1 ல் 1 ஏக்கர் 69 செண்ட் மற்றும் க.ச.எண்.169 / 2 ல் 1 ஏக்கர் 21 செண்ட் , க.ச.எண்.168 / 3 ல் 1 ஏக்கர் 99 செண்ட் விஸ்தீரணம் கொண்ட பூமிகள் ஆகும் என்றால் சரிதான்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிரைய பத்திரங்கள் படி ஏற்கனவே 8 ஏக்கர் 89 செண்ட் விஸ்தீரணம் கொண்ட பூமிகள் கிரையம் மற்றும் பாகம் செய்துகொள்ளப்பட்டுவிட்டதால் 29.07.1991 மற்றும் 19.12.2001 ஆகிய தேதிகளில் ஏற்படுத்திக் கொண்ட கிரைய பத்திரங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. க.ச.எண்.169 / 1 ல் உள்ள பூமி விடுபட்டுபோய்விட்டது க.ச.எண்.168 / 3 ல் அந்த பூமி உள்ளது அந்த செக்கு பந்திக்குள்ளேயே உள்ளது. விடுபட்டு போனதனால் தான் M. பழனிச்சாமி கிரையம் செய்து கொடுத்தார்.

க.ச.எண்.169 / 1 ல் விடுபட்ட பூமி க.ச.எண்.168 / 3 ல் உள்ளதற்கான ஆதாராம் உள்ளதா என்றால் RSR ஆவணத்தில் உள்ளது. ஒவ்வொருவரின் கிரையபத்திரத்திலும் க.ச.எண்.169 / 1 ஐ குறிப்பிட்ட செக்குபந்திகுள் க.ச.எண்.168 / 3 வருகிறது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற பூமிகளை பொறுத்து ஏற்கனவே

மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.33/2002 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் தான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அசல் வழக்கு எண்.33/2002 ல் நான் தாக்கல் செய்த பிராது என்றால் சரிதான். அது ***வா.சா.ஆ. 21*** ஆகும். நான் சாட்சியம் அளித்த அசல் வழக்கு எண்.33/2002 ல் 03.05.1991 ல் M.பழனிச்சாமி எனக்கு மேற்படி தாவா பூமியை விற்றுவிட்டார் என்றும், அந்த விற்ற சொத்தை தான் நான் விவசாயம் செய்து அனுபவித்து வருவதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

க.ச.எண்.169 / 1 ல் நான் 03.05.1991 ல் கிரையம் பெற்ற 4 ஏக்கர் 18 செண்ட் பூமியானது க.ச.எண்.169 / 1 மற்றும் க.ச.எண். 168 / 3 ஆகிய காலைகளில் உள்ளது என்று அசல் வழக்கு எண்.33/2002 ல் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். 03.05.1991 ல் கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தில் சொத்துவிபரத்தில் சொல்லியுள்ள செக்குபந்திக்குள்தான் க.ச.எண்.169 / 1 , 169 / 2 மற்றம் 168 / 3 ஆகிய 3 காலைகளும் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

மேற்கண்ட தவறுகள் எல்லா பத்திரத்திலும் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.இந்த தவறுகள் காலம் கடந்துதான் தெரிந்தது என்றால் சரிதான். மேற்கண்ட அசல் வழக்கு எண்.33/2002 ம் இந்த வழக்கும் தாக்கல் செய்வதற்கு முன்பே விடுபட்டு போன காலை எண் தெரிந்து நில அளவையரை வைத்து பூமி அளக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு அளக்கும் போது பூமியின் அளவு குறைவாக இருந்தது என்றால் சரிதான்.

பூமி குறைவாக இருந்ததால் நாங்கள் சமரசம் பேசினோம் என்றால் சரிதான், அந்த சமரசத்தில் குறைவாக இருப்பதை பங்கிட்டு கொள்ளலாம் என பேசினோம் என்றால் சரிதான். வாதிகள் அதற்கு ஒப்புகொள்ளவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி ஆனதால் மேல்முறையீடு செய்து வேலுச்சாமி வகையராவுக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டு வழக்கு எண்.08/2021 ஆகும். இந்த வழக்கு எண். 96 / 2021 ல் ஆணையாளர் நியமனம் செய்து நில அளவையருடன் பூமிகளை அளந்து அறிக்கை மற்றும் வரைபடங்களை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

எனது பூமிக்கு கிழபுறம் மற்றும் சரசம்மாள் பூமிக்கு மேபுறம் இடையில் செல்லக்கூடிய வண்டித்தடம் என்னுடைய வீட்டிற்கு செல்லக் கூடிய இடத்தில்

திரும்பியவுடன் இந்த வண்டித்தடத்திற்கு தென்புறத்தில் நானும், வாதிகளும் அவர் அவரது பூமியில் தென்னைமரங்கள் வைத்துள்ளோம் என்றால் சரிதான். நான் வைத்துள்ள தென்னை மரங்கள் உள்ள இடம் தான் எனது பூமியின் கிழகோட்டின் அத்து என்றால் சரிதான். சரசம்மாள் அவரது பூமியில் வைத்துள்ள தென்னைமரங்கள்தான் அவரது பூமியின் மேபுற அத்து என்றால் சரிதான். மேற்கண்ட வீடு,. தென்னைமரங்கள் ஆகியவை நான் கிரையம் பெறும் போதே இருந்தது என்றால் நான் வாங்கிதான் தென்னை மரங்களை வைத்தேன். வாதிகளின் தென்னைமரங்கள் ஏற்கனவே இருந்தது என்றால் நான் வாங்கிய பின்னர் தான் அவர்களும் வைத்தார்கள்.

நானும் அவர்களும் தென்னைமரங்கள் வைக்கும் போது எந்தவிதமான ஆட்சேபனைகளும் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது வந்த நீதிமன்ற ஆணையாளர் நிலஅளவையருடன் வந்து அளந்து சரசம்மாள் தன் பூமியின் மேகோட்டு எல்லையில் வைத்துள்ள தென்னை மரம் உள்ள இடம் தான் சரசம்மாளின் மேகோட்டு எல்லை என காண்பித்துள்ளார் என்றால் சரிதான். யார் யார் எப்போது கிரையம் வாங்கினார்களோ அவ்வப்போது கொடுக்கப்பட்ட சுவாதீனம் அவர் அவர்களுடைய சுவாதீனத்தில் இன்று வரை உள்ளது என்றால் சரியல்ல.

நான் கிரையம் பெற்ற பின்னர் சரசம்மாள் அவர்கள் எனக்கு எந்த பூமியையும் சுவாதீனம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே ஏற்பட்ட 3 பத்திரங்களில் உள்ள பூமியை தவிர மீதமுள்ள பூமி தான் எனக்கு கிடைக்கும் என்றால் தவறு. நான் வாங்கிய பின்னர் பூமி குறைவாக இருப்பதனால் தான் நான் வாதிகளிடம் குறைவான பூமி இருப்பதாக சொல்லி கேட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமியை பொறுத்து அவர்களது பத்திரப்படி அவர்களுக்கு அளந்து அத்து ஏற்படுத்தி கொடுக்க கேட்டுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கக் கூடியது என்றால் சரியல்ல.

## மறுவிசாரணை

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.11.05 19:20:58 +0530

சார்பு நீதிபதி.

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.